# செப்டம்பர் 21

# புனித மத்தேயு - திருத்தூதர், நற்செய்தியாளர் விழா

## திருப்பலி முன்னுரை

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை

பற்றுக பற்று விடற்கு - என்கிறது திருக்குறள்.

பற்றில்லாத பரமனின் பற்றினை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். பற்றில்லாமல் வாழ வேண்டும் என்பதற்கு சிறந்த மாதிரியாய் வாழ்ந்தவர்தான் இன்று நாம் விழா காணும் புனித மத்தேயு.

இயேசுவின் விருந்தில் பாவிகளுக்கு முதலிடம். இயேசுவின் இறையாட்சிப் பணியில் வரிதண்டுவோருக்குச் சிறப்பிடம். இயேசு நிறைவளிப்பவர். எனவே குறைவுற்றோரைத் தேடி நிறைவளிப்பது சரியானதே. நிலைகுலைந்திருப்போரை தன்னைப் பின்பற்றி வருமாறும், அவர்தம் இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் உணவருந்தி மகிழ்வதும் அவர்களின் மீட்புக்கு உத்திரவாதம் தருகிறது. ஆம், "நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" என்ற ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்ட மத்தேயு, அழைப்பிற்குத் தகுந்த வாழ்க்கையை வாழ்ந்தார். நற்செய்தியை வார்த்தையாலும் எழுத்தாலும் அறிவித்தார். "பாவத்தை வெறு! பாவியையோ அன்பு செய்!" என்பதை சொல்லால் அல்ல, செயலால் உணர்த்துகின்றார் இயேசு. எல்லோரும் வெறுத்த நிலையில் இயேசுவின் அழைப்பு மத்தேயுவுக்கு அன்பையும் நல்ல புரிதலையும் கொடுத்த து. இதோ மத்தேயுவை அழைத்த இயேசு நாம் இருக்கும் நிலையிலே நம்மையும் அழைக்கின்றார். மனம் மாறியவர்களாய் அவரைப் பின் தொடரும் அருள் வேண்டி இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

உமக்குத் திருப்பணி புரிய ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தவரே எம் இறைவா!

திரு அவையினை வழிநடத்தும் திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்டதன் மேன்மையை உணர்ந்து, உமது பிள்ளைகளாகிய எங்களை உமது அன்பின் வழியில் நடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

நேர்மையோடு மக்களினங்களை ஆளும் அரசரே எம் இறைவா!

நாடுகளை ஆளும் ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் ஏற்றத்தாழ்வு கருதாமல், எல்லா மக்களையும் சமநிலையில் பாவித்து, அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

உமது திருமுக ஒளியை எம்மீது வீசச் செய்து எமக்கு ஆசி வழங்குபவரே எம் இறைவா!

எம்மிடையே வாழும் இளைய தலைமுறையினரை ஆசீர்வதியும். இவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களின் துயரினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் தியாக உள்ளத்தினைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மத்தேயுவை அழைத்தவரே எம் இறைவா!

எம்முடைய பாவங்களால் கடவுளை விட்டு வெகுதொலைவில் போன நாங்கள், உம்மிடத்தில் திரும்பி வந்து, உம்மீது உண்மையான அன்பினை வெளிப்படுத்த அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com